14.08.2025

சிறப்பு மாவட்ட நீதிமன்றம் எண் - II, திருச்சிராப்பள்ளி
(மோட்டார் வாகன விபத்து நட்ட ஈடு கோரும் தீர்ப்பாயம்)

**எம்.சி.ஓ.பி. எண். 1327/2023**
**ம.சா. - 2**

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் நாள் 1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி உதவியாளர் திரு. மு. ராஜேஷ்குமார் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளவரசன் | தொழில் | |
| தந்தை/ கணவர் பெயர் | | வட்டம் | |
| வயது | | கிராமம் | |

**<u>முதல் விசாரணை (மனுதாரர் தரப்பில்) :</u>**

நான் மனுதாரர்கள் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் அதை படித்து பார்த்து புரிந்து கொண்டு கையொப்பமிட்டுள்ளேன். அதை ஏற்றுக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**<u>கு.வி. (1 வது எதிர்மனுதாரர் தரப்பில்) :</u>**

இந்த விபத்து சம்பந்தமாக இந்த நீதிமன்றத்தில்தான் சாட்சியம் அளிக்கிறேன் . வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லைஎ ன்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வரவில்லை மனுதாரர் சொல்லிதான் சாட்சியம் அளிக்கவந்தேன் என்றால் சரிதான். நான் போலிசிடம் சம்பவம் குறித்து சொன்னதாகவோ போலிசார் என்னை விசாரித்ததாகவோ நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து 17.11.2016 ல் நடந்தது. நான் விபத்தை பார்க்கதாதல்தான் நிருபண வாக்குமூலத்தில் தேதி தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் நான் கம்பெனியில் வேலை பார்க்கவில்லை என்றால் சரிதான் அப்போது ஸ்ரீமத்ஆண்டவன் காலேஜில் படித்துக்கொண்டிருந்தேன். சம்பவம் நடந்தது

14.08.2025

ஸ்ரீபெரம்பலூரில் என்றால் சரிதான். மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத சம்பவத்தை பார்த்தாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் நான் முன்னால் போய்க்கொண்டிருந்தபோது என் பின்னால் பேருந்து வந்தது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான் எனக்கு முன்னால் 4 நபர்கள் 100 அடி துாரத்தில் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். சம்பவம் சமயத்தில் பேருந்தை தவிர வேறு வாகனம் இல்லை என்றால் பேருந்தைதான் நான் பார்த்தேன் வேறு எதையும் பார்க்கவில்லை. ரோடு சுமார் 60 அடி இருக்குமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை பிரிக்கும் சென்டர் மீடியன் இருக்கிறது என்றால் சரிதான். வாகனம் போகும் அதே வழியில் எதிரே வாகனம் வராது என்றால் சரிதான். மண் ரோடு எத்தனை அடி என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஆனால் பேருந்து மண் ரோட்டில் இறங்கியது. இநத் விபத்தில் ஒருவருககு மட்டும்தான் காயம் என்றால் இன்னொருவருக்கும் ஏற்பட்டதுபோல் தெிரந்தது சரியாக ஞாபகமில்லை. இந்த விபத்தில் ஒருவருக்கு மட்டும்தான் காயம் என்றும் வேறு எவருக்கும் காயம் என்றால் எனக்கு தெரியவில்லை. விபத்து சமயத்தில் அங்கு நடந்து போன நபர்களில் ஒருவரிடம் என்னுடைய எந்த போன் நம்பர், யாரிடம் கொடுத்தேன் போன்ற விவரங்களை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த நபர் என்னிடமிருந்து எனக்கு தகவல் சொல்லி நான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து இறந்துபோனவரின் கவனக்குறைவால் பேருந்து வருலவதைர கவனிக்காமல் குறுக்கே வந்ததால்தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சாட்சியம் அளித்ததை தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு, அவரது கையொப்பம் பெறப்பட்டது.

சிறப்பு மாவட்ட நீதிபதி எண்.II,
திருச்சிராப்பள்ளி.